தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!



கழக இளைஞர் அணிச் செயலாளர் - தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 101 - தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் சுற்றுப்பயண விவரம்:-

நாள் : 03.10.2026 (சனிக்கிழமை)

வ.எண்	நேரம்	ஒன்றிய / நகர / பேரூர் கழகங்கள்	இடம்
1.	மாலை 4.30	குண்டடம் மேற்கு ஒன்றியம்	நொச்சிப்பாளையம்
2.	மாலை 5.30	தாராபுரம் மேற்கு ஒன்றியம்	தளவாய்பட்டணம்
3.	மாலை 6.00	தாராபுரம் நகரம்	பெரியார் சிலை அருகில்
4.	இரவு 7.00	தாராபுரம் நகரம்	வடதாரை

தேர்தல் பணிக்குழு

101 – தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி

நிதி மேலாண்மையை தொலைநோக்குப் பார்வையோடு கையாண்ட திராவிட மாடல் அரசு!

த.வெ.க. அரசின் நிர்வாகக் குறைபாடால் தமிழ்நாட்டில் உற்பத்தி முடங்கியது!


முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம்!

சென்னை, அக்.2

திமுக ஆட்சிக் காலத்தில் நாட்டின் பிற மாநிலங்களை விஞ்சி, இரட்டை இலக்க வளர்ச்சியோடு ஜி.எஸ்.டி வசூலில் சாதனை படைத்த தமிழ்நாட்டின் நிதி நிலைமை, இன்று தொடர்ந்து மூன்று மாதங்களாகக் குறைந்து, 5% வரை சரிவைச் சந்தித்திருப்பது வேதனையளிக்கிறது என முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம் தெரிவித்துள்ளார்.



நாட்டின் பிற மாநிலங்கள் தொடர் தொழில் வளர்ச்சியைக் காணும் போது, தமிழ்நாட்டில் மட்டும் உற்பத்தி முடங்கி, நுகர்வு சுருங்கி வருவது நிர்வாகக் கோளாறின் வெளிப்படையான அடையாளம்.



தொழில் முதலீடுகளையும் நிதி மேலாண்மையையும் தொலைநோக்குப் பார்வையோடு கையாண்ட திராவிட மாடல் ஆட்சியின் வழிகாட்டுதல் இன்றி, பொருளாதாரத்தை முடக்கியுள்ள இந்த சீர்கேட்டிற்கு ஆளும் அரசு என்ன பதில் சொல்லப் போகிறது?

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில்

த.வெ.க.வினர் போலி வீடியோ மூலம் அவதூறுப் பிரச்சாரம்!

கழக வழக்கறிஞர்கள் ஆதாரத்துடன் புகார்!

தாராபுரம், அக். 2-

த.வெ.க வினர் திமுக கட்சியின் துண்டு அணிந்து கொண்டு வீடு வீடாக பணம் கொடுத்து அதை வீடியோ பதிவு செய்தும் பணத்தை வாங்கிகொண்டு த.வெ.கவிற்கு ஓட்டு போடுவோம் என்று வாக்காளர் உறுதி கூறுவதுபோல் வீடியோ பதிவு செய்து. சமூக வலைதளமான இன்ஸ்டாகிராம், பேஸ்புக், டுவிட்டர், வாட்ஸ் அப், யூடியூப்களில் ரீல்ஸ் வெளியிட்டு த.வெ.க வினர் அவதூறு பரப்பி வருகின்றனர்.

இது தேர்தல் நடத்தை விதிமுறை மீறல் ஆகும். இதன் காரணமாக வீடியோ வெளியிட்ட த வெ க வினர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க கோரி திமுக மாநில சட்டத்துறை இணைச் செயலாளரும், தாராபுரம் சட்டமன்ற தொகுதி "வார் ரூம்" பொறுப்பு பாளருமான எம். அருட்செல்வன் தலைமையிலான வழக்கறிஞர்கள் குழு தாராபுரம் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், வருவாய் கோட்டாட்சியருமன பெலிக்ஸ் ராஜாவிடம் திமுக வழக்கறிஞர்கள் வீடியோ ஆதாரத்துடன் புகார் அளித்தனர்.



இந்நிகழ்ச்சியில் திருப்பூர், கோவை, மற்றும் ஈரோடு மாவட்ட திமுக. வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் க.செல்வராசு.. ராஜேந்திரபாபு, பொன் ராஜ், பார்த்திபன், பத்மநாபன், அருள்குமார்,ராஜா, திருமலை, பத்ரி(எ) பழனிச்சாமி, மகேந்திரன், அன்பு செழியன், வரதராஜ், மருத ராஜ், ஆகிய வழக்கறிஞர் குழுவினர் கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் ஐ.பரந்தாமனை ஆதரித்து, மதுராந்தகத்தில் உள்ள நகர வீதிகளில் வீடு வீடாக சென்று வாக்கு சேகரிக்கும் பணி கழக அமைப்புச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் நடைபெற்றது. இந்த வாக்கு சேகரிப்பின் போது சட்ட திட்ட திருத்தக்குழு செயலாளர் மாநிலங்களவை உறுப்பினர் இரா.கிரிராஜன், மாநிலங்களவை உறுப்பினர் மூத்த வழக்கறிஞர் பி வில்சன், சட்டத்துறை முன்னாள் இணை செயலாளர் கே,தேவராஜன், சட்டத்துறை இணைச் செயலாளர் ஜெ.பச்சையப்பன், துணைச் செயலாளர் என்.மருது கணேஷ் , தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், மாவட்ட அமைப்பாளர்கள் என்.கனகராஜ், ப.கார்த்திகேயன், பி.பிரேம்குமார், WAR-ROOM வழக்கறிஞர்கள் வி நன்மாறன் எஸ் ஆறுமுகம், எஸ் மனோகரன், பாலாஜி, மற்றும் முன்னாள் அரசு வழக்கறிஞர்கள் திருமுருகன், கண்ணன், கலைச்செல்வன் பகவதி, வெற்றிச்செல்வம் , இ.முத்துக்குமார் மற்றும் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட கழக வழக்கறிஞர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

தூத்துக்குடி தொகுதியில்

ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு சன் டிவி நிதி உதவி!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. ட்விட்டர் பதிவில் மகிழ்ச்சி!



தூத்துக்குடி, அக். 2-

நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி தனது ட்விட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

எனது தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட கோவில்பட்டி, விளாத்திகுளம் பகுதிகளில் குழந்தைகளிடையே நிலவும் ஊட்டச்சத்துக் குறைபாட்டிற்கு முக்கிய காரணங்களாக மிக இளம் வயதில் பெண்களுக்குத் திருமணம் நடைபெறுவது உள்ளிட்ட பல காரணங்களை கண்டறிந்து அவற்றை சரி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள சன் டிவி நிறுவனத்தை அணுகினோம்.

அதன் தொடர்ச்சியாக, முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் நினைவாக சன் டிவி சார்பில் வழங்கப்படும் சமூக மேம்பாட்டு நிதியிலிருந்து, குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்கவும், குழந்தைத் திருமணங்களைத் தடுக்கவும், அங்கன்வாடி மையங்கள், பள்ளிகளில் உட்கட்டமைப்பை மேம்படுத்தவும் ரூ.3.66 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.இதற்கான காசோலையை சன் டிவி சார்பாக திருமிகு. காவேரி கலாநிதி மாறன் அவர்கள்,

தொண்டு அமைப்பிற்கு வழங்கிய நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன். குழந்தைகளின் நலனுக்காக முன்னெடுக்கப்படும் இப்பணிகள் அப்பகுதிகளில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் என நம்புகிறேன்.

தூத்துக்குடி மாவட்ட வளர்ச்சி மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர் திருமிகு. செல்வி உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

தா.மோ.அன்பரசன், க.சுந்தர் முன்னிலையில்! மேயர் பிரியா ராஜன் - தமிழன் பிரசன்னா பங்கேற்பு!

கட்சி மாறுவதால் மக்கள்மீது மீண்டும் தேர்தலைத் திணிக்கும் நிலைக்கு வாக்கின் மூலம் பாடம் புகட்ட வேண்டும்!

மதுராந்தகம் தொகுதியில் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பிரச்சாரம்!



மதுராந்தகம், அக்.2-

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து, மதுராந்தகம் வடக்கு-தெற்கு ஒன்றியங்களில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பாகங்களில் ஒன்றான, மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட புழுதிவாக்கம் ஊராட்சி, பாகம்எண் 7-ல், (01.10.2026) வியாழக்கிழமை கிராம மக்கள் சந்திப்புக் கூட்டம் நடைபெற்றது.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமையில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ. அன்பரசன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர், மதுராந்தகம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சத்திய சாய்நாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், கழக செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் திரண்டிருந்த பொதுமக்களிடம் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

"இந்தத் தேர்தல் தேவையா?"

இந்த வாக்குச் சேகரிப்பின் போது பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. பேசியதாவது:

"இந்தத் தேர்தல் தேவையா?" என்று கேள்வி எழுப்பிய அவர், சட்டமன்றம், நாடாளுமன்றம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகளின் பதவிக்காலம் பொதுவாக ஐந்து ஆண்டுகள் என்பதைச் சுட்டிக்காட்டினார்.

கடந்த தேர்தலில் வாக்களித்து சுமார் 140 நாட்களே ஆன நிலையில், மதுராந்தகம் தொகுதி மக்கள் மீண்டும் வாக்களிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், "வாக்களித்த விரலில் வைத்த மை கூட காய்ந்திருக்காது; அதற்குள் மீண்டும் தேர்தலைச் சந்திக்க வேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது என்பதை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்" என்றார்.

மக்கள் பிரதிநிதியின் மறைவு உள்ளிட்ட காரணங்களால் பொதுவாக இடைத்தேர்தல் நடைபெறும் நிலையில், இங்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் உயிருடன் இருக்கும் போதே இடைத்தேர்தல் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், அவரது கட்சி மாற்றத்தை விமர்சித்தார். தனிப்பட்ட அரசியல் நலன் மற்றும் மீண்டும் பதவி பெறும் நோக்கத்திற்காக இந்தத் தேர்தல் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

"மக்களுக்கும் இயக்கத்திற்கும் விசுவாசமாக இருக்க வேண்டும்"

தொடர்ந்து பேசிய அவர், "எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறோமோ, எந்த இயக்கத்தின் சார்பில், எந்தச் சின்னத்தில் தேர்ந்தெடுக்கப்படுகிறோமோ, அந்த மக்களுக்கும் அந்த இயக்கத்திற்கும் விசுவாசமாக இருக்க வேண்டும்.

மதுராந்தகம் மக்கள் அளிக்கப்போகும் வாக்கு, மக்கள் பிரதிநிதிகளுக்குப் பொறுப்புணர்வை ஏற்படுத்தும் செய்தியாக அமைய வேண்டும்" என்றார்.

மேலும், "இந்தத் தேர்தல் ஜனநாயகத்திற்கும் பணநாயகத்திற்கும் இடையிலான தேர்தல்: ஆணவத்திற்கும் அன்பிற்கும் இடையிலான தேர்தல்; மக்களை ஏமாளிகளாகக் கருதுபவர்களுக்குப் பாடம் புகட்டும் தேர்தல்" என்றும் அவர் பேசினார்.

கடந்த தேர்தலில் ஒரு சின்னத்தில் வாக்குப் பெற்றுவிட்டு, குறுகிய காலத்திற்குள் வேறு கட்சிக்குச் செல்வதை விமர்சித்த அவர், "ஐந்து ஆண்டுகளுக்காகத்தான் மக்கள் வாக்களிக்கிறார்கள். கட்சி மாறுவதால் மீண்டும் மீண்டும் தேர்தலைச் சந்திக்கும் நிலை உருவாகக் கூடாது. ஆதாயத்திற்காக எந்தக் கட்சிக்கு வேண்டுமானாலும் மாறலாம் என்ற நிலைக்கு ஜனநாயகக் கட்டுப்பாடு மக்களின் வாக்குரிமைதான்" என்றார்.

இளம் வாக்காளர்கள், இளம் பெண்கள் மற்றும் இளைஞர்கள் இந்தத் தேர்தலில் முக்கியப் பங்கு வகிப்பார்கள் என்றும், வாக்குரிமையைப் பொறுப்புணர்வுடன் பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

"வாக்குரிமை என்பது மக்களின் கையில் உள்ள மிகப்பெரிய ஜனநாயக உரிமை. அதைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்" என்று வலியுறுத்திய அவர், அக்டோபர் 6-ஆம் தேதி நடைபெறும் வாக்குப்பதிவில் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்றார்.

தொடர்ந்து கூட்டத்தினரை நோக்கி, "உங்களது வேட்பாளர் யார்?" என்று அவர் கேள்வி எழுப்பியபோது, கூட்டத்தினர் "பரந்தாமன்" என்றும், "உங்க எது சின்னம்?" என்று கேட்ட போது "உதயசூரியன்" என்றும் முழக்கமிட்டனர்.

வாக்குப்பதிவு இயந்திரத்தில் மூன்றாவது வரிசையில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனின் பெயர், படம் மற்றும் உதயசூரியன் சின்னம் இடம்பெற்றிருக்கும் என்று குறிப்பிட்டு, அக்டோபர் 6-ஆம் தேதி உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டு பி.கே.சேகர்பாபு தனது உரையை நிறைவு செய்தார்.

இந்நிகழ்வில் கே.எஸ்.ரவிச்சந்திரன், ஐ.சி.எப். வ. முரளிதரன், எ.நாகராசன், தேவஜவகர், எஸ்.தனசேகர், வட்டக் கழகச் செயலாளர்கள் பால்ராஜ், ராமச்சந்திரன், லண்டன் க.முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட 7-வது பாகப் பொறுப்பாளர்கள் பத்தன் அருள்ராஜ், டி.ஜி.எம். பெருமாள், பி.தாண்டவராயன், பி.பார்த்திபன், சத்தியராஜ் மற்றும் கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள், முன்னோடிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



மதுராந்தகத்தில் நாளை 3-ஆம் தேதி நடைபெற உள்ள தேர்தல் பிரச்சார பொது கூட்டத்திற்கு கழகத் தலைவர்-தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் வருகையை யொட்டி காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் செயலாளர்களுடன் நடைபெற்ற கலந்தாலோசனை கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைகளை வழங்கினார். அருகில் மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், து.மூர்த்தி, மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.